# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 20 | வெள்ளிக்கிழமை | 04.07.2025 | கதிர் 244







## முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தில் தேரின் முடிக்கலசம் கழன்று வீழ்ந்ததில் பெண் ஒருவர் மரணம்



முள்ளிவாய்க்கால், ஜூலை 04

முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெற்ற வேளை தேர் வீதி உலா வரும்போது தேரின் முடிக்கலசம் கட்டப்பட்டிருந்த மின் இணைப்பு வயரில் சிக்கி கழன்று வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒரு பெண் படுகாயமடைந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சங்கரப்பிள்ளை சசிகலா என்ற பெண்ணே இதன் போது உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் செப்டெம்பரில் நீக்கப்படும்!

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி



கொழும்பு, ஜூலை 04

இலங்கையில் 1979 ஆம் ஆண்டு காலப் பகுதி முதல் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் முழுமையாக நீக்கப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1979 ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டு சட்டமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும், அது இன்றளவிலும் நீடிக்கின்றது.

7

## சந்திரசேனவுக்கு விளக்கமறியல்



கொழும்பு, ஜூலை 04

முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதிமன்றம் இன்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலின்

7

## ஹயஸ் ரக வாகனம் மோதி முதியவர் பலி

### வவுனியாவில் சோகம்



வவுனியா, ஜூலை 04

வவுனியா - யாழ். வீதியில் ஹயஸ் ரக வானம் மோதியதில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

குறித்த விபத்து வவுனியா - யாழ். வீதியில் புதிய பேருந்து நிலையத்திற்கு அண்மையில் இன்று

7

## யாழ்ப்பாணத்தில் நாளை மாபெரும் தொழில் சந்தை




யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர், யுவதிகளின் தொழில் வாய்ப்புக் கனவை நனவாக்கும் முகமாக நாளை சனிக்கிழமை மாபெரும் தொழில் வாய்ப்பு முகாம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

7

## தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுக்கொலை




கொழும்பு, ஜூலை 04

தென்னிலங்கையில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ராகம, படுவத்தைப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டியில் வந்த இருவர் பிஸ்டல் ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக விசாரித்தபோது,

7

# தனிநபர்களிடமிருந்து வாக்குமூலங்களை பெறுவது எவ்வாறு? தயாரான சுற்றறிக்கை



கொழும்பு, ஜூலை 04

முறைப்பாடு தொடர்பாக வாக்குமூலம் அளிக்க அழைக்கப்படும்போது, முறைப்பாட்டின் உள்ளடக்கம் தொடர்பில் குறித்த நபருக்கு எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று (3) உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக எரிசக்தி நிபுணரான விதுர ருலபனாவ தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு வந்தபோது இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜயரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

சமூக ஊடகம் ஒன்றில் தான் பதிவிட்ட ஒரு கருத்து தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை பெற விரும்புவதாகக் கூறி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தொலைபேசியில் தன்னை அழைத்ததாக மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது தனக்கு எதிரான முறைப்பாடு என்ன? அதன் உள்ளடக்கம் என்ன என்று சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியிடம் கேட்டதாகவும், பிரதிவாதியான பொலிஸ் அதிகாரி அதற்கு பதிலளிக்க மறுத்துவிட்டதாகவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதிவாதியான பொலிஸ் அதிகாரி அத்தகைய தகவல்களை வழங்காமல் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் கணினி குற்றப் பிரிவின் பிற அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபோது அளித்த உறுதிமொழியின்படி, தொடர்புடைய சுற்றறிக்கையை தயாரித்து நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கியுள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பில் தான் திருப்தி அடைந்துள்ளதாகவும், மனுவின் விசாரணையை அதற்கேற்ப நிறைவு செய்ய முடியும் என்றும் மனுதாரரின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

அதன்படி, மனுவின் விசாரணையை நிறைவு செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உப பரிசோதகர், அந்த பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் பெயரிடப்பட்டிருந்தனர். (ஐ)

# தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்க தீர்மானம் நிறைவேற்றம்

வவுனியா நகரில் ஞாயிற்று கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி வகுப்புக்களைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிலையஙகளுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என பலரும் சுட்டிக் காட்டியுள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது, பதிலளித்த வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் தனியார் கல்வி நிலையங்களை நடத்துவதற்கு தடை விதித்து மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை தாம் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையத்தை நடத்த முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாநகர சபையில் கடந்த திங்கள்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில்ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 மற்றும் அதன் கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வ நிலையங்களை நடத்த முடியாது என தீர்மானம் எட்டப்பட்டதுடன், 10 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கும் இடஙகளில் மாணவிகள்மாற்றும்மாணவர்களுக்கான மலசல கூட வசதி, குடிநீர் வசதி என்பன இருக்க வேண்டும்எனவும், அதனை சுகாதார பரிசோதகர்கள் கண்காணிக்க வேண்டும்எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அரசாங்கத்தின் சூழ்ச்சி வெளிப்பட்டதால் கோபமடையும் பிமல்



கொழும்பு, ஜூலை 04

அரசாங்கத்தினால் அபகரிக்கப்படவிருந்த நிலங்கள் எமது நடவடிக்கைகளின் விளைவாகவே பாதுகாக்கப்பட்டது என்பதை உறுதிசெய்த அமைச்சருக்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்துள்ள சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அவர்களது சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கோபமடைவது இயல்பான விடயமேயாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசாங்கத்தினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காணிகளைக் கையகப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக சுமந்திரனால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதுகுறித்த விசாரணைகளை அடுத்து அவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பித்தது.

அதனையடுத்து அரசாங்கத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட 2443 எனும் இலக்க வர்த்தமானியின் ஊடாக மேற்குறிப்பிட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானி நிறுத்தப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சுமந்திரன் போன்றோர் ரணில் விக்ரமசிங்கவுடன் பணியாற்றியமையினால் அவர்கள் தம்மையும் ரணிலைப் போன்று கருதுவதாகக் குறிப்பிட்டார்.

அத்தோடு காணி உரித்தை உறுதிப்படுத்தும் நோக்கில் தாம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசியல் மற்றும் இனவாத அடிப்படையிலான கருத்துக்களின் விளைவாக இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கு தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்திருக்கும் பதிவின் ஊடாகப் பதிலளித்துள்ள சுமந்திரன், 'அவர்கள் எதனை வேண்டுமானாலும் கூறட்டும். தமது சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் கோபமடைவது இயல்பான விடயமேயாகும்' என குறிப்பிட்டுள்ளார். அத்தோடு அபகரிக்கப்படவிருந்த நிலங்கள் எமது நடவடிக்கைகளின் விளைவாக பாதுகாக்கப்பட்டமையை உறுதிசெய்த அமைச்சருக்கு எமது நன்றிகள்.

இவ்விடயத்தில் தொடர்ந்தும் அவதானமாகவே இருப்போம் என்றும் சுமந்திரன் பதிவிட்டுள்ளார். (ஐ)

## 25 ஏக்கர் காணிகள் – குளங்களை விடுவிக்க ஆரம்பகட்ட நடவடிக்கை




வவுனியா, ஜூலை 04

வவுனியாவில் கூகுள் வரைபடம் மூலம் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் மற்றும் குளங்களை விடுவிப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகளை முன்னெடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (03.07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வவுனியா மாவட்டத்தில் வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கும், காணியற்ற மக்களுக்கும் புதிதாக திருமணம் முடித்து காணிகள் அற்ற குடும்பங்களினதும் நன்மை கருதி அவர்களுக்கான ஒரு தீர்வினை வழங்குவதற்கான நடவடிக்கையினை தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்துள்ளது.

அந்தவகையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் கூகுள் வரைபடத்தின் மூலம் வனவளத்திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளையும் விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக இந்த மாவட்டத்தில் அண்ணளவாக 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 52 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளது.

அவை அனைத்தையும் தேசியமக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் விடுவிக்கவுள்ளது. அந்த காணிகளை அதன் உரிமையாளர்களுக்கும், காணிகள் அற்ற மக்களுக்கும் வழங்குவதற்கான துரித நடவடிக்கையினை நாம் மேற்கொண்டுள்ளோம். அத்துடன் வவுனியாவில் 849 குளங்கள் உள்ளது. அதில் 221 குளங்கள் வனவள திணைக்களத்தின் எலைக்குள் அமைந்துள்ளது.

இவற்றில் தற்போது 44 குளங்களை உடனடியாக விடுவித்து அவற்றை மீளவும் புணர்நிர்மானம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் காடுமண்டி காணப்படுகின்ற ஏனைய 149 குளங்களை மீட்டு அவற்றை சுத்தப்படுத்தி மக்கள் பாவனைக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கை விரைவாக முன்னெடுக்கப்படும். இந்த வருடத்திற்குள் அந்த பணிகள் ஆரம்பிக்கப்படும். இந்த மாவட்டத்தில் ஆறு பெரிய நீர்ப்பாசன குளங்கள் உள்ளன.

அவற்றை புணரமைப்பதற்காக 780 மில்லியன் ரூபாய் தேவையாகவுள்ளது. அந்தநிதியை அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காணி விடுவிப்பின் முதற்கட்டமாக நெடுங்கேணியில் வனவளத்திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் விடுவிக்கப்படவேண்டிய இடங்களை அடையாளப்படுத்தும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தோம்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர், வனவளதிணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் காலங்களில் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக உலக வங்கியானது ஒரு பில்லியன் டொலர் நிதியை வழங்கவுள்ளது. இதன் மூலம் வடகிழக்கு மக்களின் பொருளாதாரத்தை வளம்பெறசெய்து அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவோம்" எனத் தெரிவித்தார். (ஐ)

## செம்மணிக்கு அநுர அரசாங்கமே நீதியை நிலைநாட்டும்





கொழும்பு, ஜூலை 04

செம்மணி புதைகுழிக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமே நீதியை நிலைநாட்டும் என கடற்றொழில் அமைச்சரும் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி - கரைச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் இறுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த ஊடக சந்திப்பில் செம்மணி படுகொலை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது செம்மணி படுகொலை சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்று கடும் சீற்றத்துடன் கூறியுள்ளார்.

மேலும், "செம்மணி படுகொலை சம்பந்தமாக அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். கடந்த காலங்களிலும் தமது தேசிய மக்கள் சக்தியின் ரோகன விஜய வீர போன்றவர்களுடன் 60 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளே ஏற்பட்டிருக்கும், அண்மையில் கூட இலங்கைக்கு வருகை தந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவரிடமும் தேசிய மக்கள் சக்தி ஆகிய நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.

தற்பொழுது செம்மணி பகுதியில் தோண்டப்பட்ட சிறுவர்களின் உடலங்கள் மற்றும் முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என அனைவரன் எலும்பு கூடு மாதிரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதன் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவதாயின் பல வருடங்கள் ஆகும்.

எனவே அண்மையில் வருகை தந்த மனித உரிமை ஆணையாளரிடம் தற்பொழுது செம்மணி பகுதியில் அகழப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கான கருவிகளை இலங்கைக்கு வழங்கி மனித உரிமையை நிலைநாட்ட வேண்டும்" என வலியுறுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

## கிளிநொச்சியில் மூன்று மில்லியன் செலவில் தபாலக கட்டடம்



கிளிநொச்சி - முரசுமோட்டை பிரதேசத்தில் சுமார் மூன்று மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட உப தபாலக கட்டிடம் நேற்று கடற்றொழில் அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் நிரந்தர கட்டிடமின்றி இயங்கி வந்த உப தபாலகத்துக்கான நிரந்தர கட்டிடம் மூன்று மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் உப தபாலகத்துக்கான கட்டிடத்தினை இன்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீபன், மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் மற்றும் துறைசார்ந்த திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான போசாக்கு பொதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஊன்று கோல் சக்கர நாற்காலி என்பன வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு




மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 18,615 கன அடியில் இருந்து 19,286 கனஅடியாக அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலத்தில், காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழை காரணமாக, அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி உபரிநீர் காவிரியில் திறக்கப்பட்டது. இதனையடுத்து, காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வந்தது.

மேட்டூர் அணையின் 92 ஆண்டு கால வரலாற்றில், 44வது ஆண்டாகவும், ஜூன் மாதத்தில் 66 ஆண்டுக்கு பிறகு 2வதாகவும், கடந்த 29ம் தேதி முழுமையாக நிரம்பி 120 அடியை எட்டியது. அதனை தொடர்ந்து இதேபோல், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 31,500 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை விநாடிக்கு 18,615 அடியாக சரிந்தது. இந்நிலையில் இன்று அணையின் நீர்வரத்து 18,615 கன அடியில் இருந்து 19,286 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.60 அடியாக சரிந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து 24,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு 22,100 கன அடி நீர் திறக்கபப்டுகிறது. (ஐ)

## தரமணியில் ரூ.40 கோடியில் 'தமிழ் அறிவு வளாகம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்





தரமணியில் ரூ.40 கோடியில் தமிழ் அறிவு வளாகம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டி வைத்தார். சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தரமணி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சார்பில் தமிழ் மக்களுக்கான பண்பாட்டுத் தலமாகச் செயல்படவிருக்கும் 'தமிழ் அறிவு வளாகம்' கட்டுமான பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி, பணியினை தொடங்கி வைத்தார்.

1994ம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின்பல்வேறு துறைகளுடன்இணைந்துதமிழ்ப்பண்பாட்டு வரலாற்றை மீள்கட்டமைக்கும் செயல்பாடுகளையும் இந்நூலகம் மேற்கொண்டு வருகிறது. இதனை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் நோக்குடன், தமிழ் அறிவு வளாகத்தை உருவாக்கும் வகையில் சென்னை, தரமணியில் உள்ள தொழில்நுட்ப வளாகத்தில் 30,000 சதுர அடி நிலத்தை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சிந்துவெளி ஆய்வு மையம், பொதுவியல்ஆய்வு மையம் ஆகியவை இவ்வளாகத்தில் முக்கிய அங்கங்களாகும். இதற்கான மொத்த கட்டுமான செலவு ரூ.40 கோடி ஆகும். தமிழ்நாடு அரசு, தமிழ்கூறும் நல்லுலகத்தின் பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள், புரவலர்கள் உதவியுடன் இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர்கள் பாலகிருஷ்ணன், மரியம் ராம், ராமசந்திரன், இந்திரன், சுந்தர் கணேசன், கட்டட வடிவமைப்பாளர் ராஜேந்திரன், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத் திட்டப்பணி இயக்குநர் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)


## வணிகவரித்துறை, பள்ளி கல்வித்துறையில் பதவி உயர்வு மூலம் காலியிடங்களை நிரப்ப வேண்டும்



பாமக தலைவர் அன்புமணி வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசின் வணிகவரித்துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால், சில ஆண்டுகளாக வணிகவரி அலுவலர், உதவி ஆணையர் பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படாததால் 200க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன. அதனால், அத்துறையில் வரி வசூல் பாதிக்கப்படுவதுடன், அதிகாரிகளுக்கு தேவையற்ற பணிச்சுமையும் ஏற்படுகிறது.

அதேபோல், பள்ளிக்கல்வித் துறையில் 15க்கும் மேற்பட்ட முதன்மை கல்வி அலுவலர்கள், 29 மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படாமல் உள்ளனர். எனவே, பள்ளிக்கல்வித்துறை, வணிகவரித் துறை பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் அனைத்தையும் உரிய நடைமுறைகளை பின்பற்றி நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## திருச்செந்தூர் குடமுழுக்கு கனிமொழி ஆய்வு



திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடுகளை எம்.பி. கனிமொழி ஆய்வு செய்தார். திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு ஜூலை 7ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் ஆய்வு செய்தார். குடமுழுக்கு விழாவிற்கு சுமார் 10 லட்சம் பக்தர்கள் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 10வது நாளாக ஒகேனக்கல்லில் குளிக்கத் தடை



ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் 10வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து அதிகரிப்பால் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. (ஐ)





# தடுப்பூசி அவசியமா?

கொரோனா பெருந்தொற்றின் போது தடுப்பூசியைப் பற்றிய விழிப்புணர்வும் தகவல்களும் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. அரசாங்கமும் கூட கொரோனாவுக்கான தடுப்பூசி போடுவதைக் கட்டாயமாக்கி இருந்தது. குழந்தை பிறந்ததில் இருந்தே தடுப்பூசியின் தேவை தொடங்கிவிடுகிறது. இயற்கையாக உடலில் மரபணுக்கள் வழியாக வரக்கூடிய நோய் எதிர்ப்பு சக்திக்கு அப்பாற்பட்டு, வெளியில் இருந்து உள்நுழையக்கூடிய குறிப்பிட்ட நுண்ணுயிரிகளுக்காகவோ அதனால் ஏற்படக்கூடிய நோய்களுக்கு எதிராகவோ வெளியில் இருந்து செலுத்தப்படக்கூடிய ஒன்றுதான் தடுப்பூசி.

குறிப்பிட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நோய்க்கான எதிர்ப்பு சக்தி இயற்கையாகவே அந்த நோய் பாதிப்பின்போது உடலில் உருவாகும். மனிதனுக்குச் சில குறிப்பிட்ட நோய்கள் இருமுறை வராமல் இருப்பதற்கும் இதுதான் காரணம். ஆனால், அந்த நோயின் தாக்கம் உடலில் பலவகையான வலிகளையும் பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தும்.

நோய் வந்த பிறகு சிகிச்சை எடுப்பதைவிட அந்த நோய் வராமல் பாதுகாப்பதுதான் சாமர்த்தியம். இதற்கு மருத்துவ உலகில் ஏற்பட்ட புரட்சிதான் தடுப்பூசிகள். 1796இல் எட்வர்ட் ஜென்னர் மாட்டம்மை என்று சொல்லக்கூடிய ‘உழறிழஓ’ வைரஸால் ஏற்பட்ட புண்ணில் இருந்து தயாரித்த ஒருவகையான கலவையை எட்டு வயது சிறுவனின் உடலில் செலுத்தி ஆராய்ந்ததில் அந்தச் சிறுவனின் உடல் சின்னம்மை நோய்க்கான எதிர்ப்பு சக்தியை உருவாக்கி இருந்தது தெரியவந்தது. இதுதான் உலகின் முதல் தடுப்பூசி. உலகின் முதல் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டவன் என்கிற அங்கீகாரத்தையும் அந்தச் சிறுவன் பெற்றான். சின்னம்மை என்று சொல்லக்கூடிய ‘ளஅயடட ிழஓ’ இந்த உலகில் இருந்து முற்றிலுமாக அகற்றப்பட, அந்தத் தடுப்பூசிதான் முதல் காரணம். போலியோ போன்ற நோய்கள் இன்று இல்லாமல் போனதுக்கும் தடுப்பூசிகள்தான் காரணம்.

ஊசி வடிவிலும், சொட்டு மருந்து வடிவிலும் தடுப்பூசிகள் உடலில் செலுத்தப்படுகின்றன. போலியோ போன்ற நோய்களுக்குச் சொட்டு மருந்து வடிவில்தான் தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தடுப்பூசி தயாரிக்கும் முறைகளில் பல விதங்கள் உள்ளன. பொதுவாக, வைரஸ் போன்ற நுண்ணுயிரிகளை எதிர்ப்பதற்காகத் தயாரிக்கப்படும் தடுப்பூசி மருந்துகளில், உயிரற்ற வைரஸை நம் உடலுக்குள் ஊசி வடிவில் செலுத்தி, அதனால் நம் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி தூண்டிவிடப்படுகிறது. பிற்காலத்தில் அதே வடிவில் உள்ள ஓர் உயிருள்ள வைரஸ் உடலை அணுகும் போது, முன்பு இதே வடிவில் உள்நுழைந்த உயிரற்ற வைரஸை எதிர்த்துச் செயல்பட்ட நோய் எதிர்ப்பு செல்கள் மீண்டும் அதே பழைய முறையில் இப்போது நுழைந்திருக்கும் உயிருள்ள வைரஸைத் தாக்கும். இதனால் அந்த வைரஸால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஏதும் இருக்காது.

தடுப்பூசி தயாரிக்கும் முறைகளில் மற்றுமொரு முறை, உயிருள்ள வைரஸின் நோய் உண்டாக்கும் பகுதியை மட்டும் செயலிழக்கச் செய்துவிட்டு, அதை உடலுக்குள் செலுத்தி நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டிவிடுவது. நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டிவிடுவதால்தான் தடுப்பூசிப் போடப்பட்ட பிறகு உடல் சூடு அதிகமாகி காய்ச்சல் ஏற்படுகிறது. தடுப்பூசி வேலை செய்கிறது என்பதற்கான சான்றுதான் காய்ச்சல்.

கொரோனா பெருந்தொற்றின் போது தடுப்பூசிக் குறித்து பல்வேறு வகையான கருத்துகள் எழுந்தன. தடுப்பூசி போட்டப் பிறகும் சிலருக்குத் தொற்று உறுதியானதும், சிலர் மாரடைப்பால் இறந்துப் போனதும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கும் மரபியலுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. மரபணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் உயிரினங்களுக்கு மரபணு பிறழ்வு விகிதம் அதிகமாக இருக்கும். வைரஸ் போன்ற நுண்ணுயிரிகளுக்கு மரபணு பிறழ்வு என்பது வெகு வேகமாக நடப்பதற்கு அதன் குறைவான மரபணு எண்ணிக்கைதான் காரணம். அப்படி மரபணு பிறழ்வுகள் நடக்கும்போது நோயை உண்டாக்கும் முக்கியமான மரபணுக்களின் வீரியம் அதிகரிக்கும். அதனால் தடுப்பூசி போடப்பட்ட பிறகு மரபணு பிறழ்வு ஏற்பட்ட வைரஸ் தாக்கும்போது நோய்த் தொற்று உண்டாகும். வெவ்வேறு மரபணு பிறழ்வுகளுடைய வைரஸ் தாக்கும்போது பொதுவாக ஆராய்ச்சி செய்து, செலுத்தப்பட்ட தடுப்பூசிகளை அந்த மரபணு பிறழ்வுகளுடைய வைரஸ்கள் எளிதாக முறியடித்துவிடுகின்றன.


முறையான பரிசோதனைகளோடு ஒரு தடுப்பூசி தயாரிக்க குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது ஆகும். ஆனால் ,கொரோனா மாதிரியான அதிவேகமாகப் பரவக்கூடிய பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி சில பரிசோதனைகளைத் தவிர்த்து மக்களின் அவசரப் பயன்பாட்டிற்கு வந்தது. அதனால் அந்தத் தடுப்பூசிகளின் பக்கவிளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வும் தகவல்களும் மக்களிடையே இல்லை என்பதும் தடுப்பூசி போட்டுக்கொண்ட சிலருக்கு ஏற்கெனவே சர்க்கரை, ரத்தழுத்தம் போன்ற நோய்கள் இருந்ததும், தடுப்பூசிப் போட்டுக்கொண்ட சிலர் மாரடைப்பால் மரணம் அடைந்ததற்கான காரணம்.

**HPV** வைரஸால் கருப்பை வாயில் உருவாகக்கூடிய புற்றுநோய்களுக்கும் தடுப்பூசிகள் இருக்கின்றன. தடுப்பூசியைப் பொருத்தவரை வயதும், எத்தனை முறை அந்தத் தடுப்பூசியை எடுத்துக்கொள்கிறோம் என்பதும் மிக முக்கியம். இரண்டு முறை போடப்படும் தடுப்பூசிகளில் முதல் முறைக்கும் இரண்டாவது முறைக்கும் இடையே இருக்கும் கால அவகாசம் மிகவும் அவசியம். கோவிட் தடுப்பூசியில்கூட முதல் முறைக்கும் இரண்டாவது முறைக்கும் கிட்டத்தட்ட தொண்ணூறு நாட்கள் இடைவெளி இருந்தது.

பொதுவாகவே குழந்தைகளுக்குத் தடுப்பூசி தொடை வழியாகச் செலுத்தப்படுகிறது. காரணம் குழந்தைகளுக்குக் கைகளின் தசை வலுப்பெற்றிருக்காது. பெரும்பாலான தடுப்பூசிகள் கை அதாவது தோள்பட்டைக்குக் கீழ் இருக்கும் தசைகள் வழியாகத்தான் செலுத்தப்படுகின்றன. இதனால் தடுப்பூசி போடப்பட்ட இடத்தில் ஏற்படும் நோய் எதிர்ப்பு சக்தியின் எதிர்வினை பாதிப்புகள் வெகுவாகக் குறைக்கப்படுகின்றன. இப்போது இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியால் பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு மூக்கு வழியாக ஸ்ப்ரே வடிவில் செலுத்தக்கூடிய தடுப்பூசிகளும் தயாரிக்கப்படுகின்றன.

தடுப்பூசிகளால் இவ்வுலகின் ஜனத்தொகை மீது ஆதிக்கம் செலுத்திய சில நோய்கள் அறவே நீக்கப்பட்டன. மக்களின் அவசரப் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்படும் தடுப்பூசிகளில் சில பக்கவிளைவுகள் உள்ளன. அதன் பின்னால் இருக்கும் அறிவியலைப் புரிந்துகொண்டு, யார் அந்தத் தடுப்பூசிகளைப் பயன்படுத்த வேண்டும், யார் பயன்படுத்தக் கூடாது என்பதற்கான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும். கேன்சர், எச்.ஐ.வி போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகளைக் கண்டுபிடிப்பதற்காகப் பல ஆராய்ச்சிகள் உலகெங்கும் நடந்த வண்ணம் இருக்கின்றன. இந்த ஆராய்ச்சிகள் வெற்றி பெற்றால் மருத்துவ உலகில் மற்றும் ஒரு புரட்சி ஏற்படும்.

**கொரோனா பெருந்தொற்றின் போது தடுப்பூசிக் குறித்து பல்வேறு வகையான கருத்துகள் எழுந்தன. தடுப்பூசி போட்டப் பிறகும் சிலருக்குத் தொற்று உறுதியானதும். சிலர் மாரடைப்பால் இறந்துப் போனதும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கும் மரபியலுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. மரபணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் உயிரினங்களுக்கு மரபணு பிறழ்வு விகிதம் அதிகமாக இருக்கும். வைரஸ் போன்ற நுண்ணுயிரிகளுக்கு மரபணு பிறழ்வு என்பது வெகு வேகமாக நடப்பதற்கு அதன் குறைவான மரபணு எண்ணிக்கைதான் காரணம்.**



# அமெரிக்காவில் புதிய மசோதா ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500% வரி: கவலை தெரிவித்த இந்தியா




உக்ரைனுக்கு எதிரான போரை நிறுத்த ஒப்புக் கொள்ளாத காரணத்தால் ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தண்டிக்க அந்நாட்டிடம் கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500 சதவீத வரி விதிக்க வேண்டுமென அமெரிக்க நாடாளுமன்றத்தில் செனட்டர் லிண்ட்சே கிரஹாம் மசோதா கொண்டு வந்துள்ளார். தற்போது ரஷ்யாவிடமிருந்து இந்தியா அதிகளவில் கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்த மசோதா மூலம் இந்திய வர்த்தகத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படும். இதற்கிடையே, 4 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள ஒன்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த போது இது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஜெய்சங்கர், “இந்த விவகாரம் தொடர்பாக இந்திய தூதரகமும், அதிகாரிகளும் செனட்டர் கிரஹாமுடன் தொடர்பில் உள்ளனர். எரிசக்தி பாதுகாப்பில் எங்கள் கவலைகள் மற்றும் நலன்கள் அவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனவே அமெரிக்க நாடாளுமன்றத்தில் நடக்கும் எந்தவொரு முன்னேற்றமும் இந்தியாவின் நலனை பாதிக்கும் எனில் உரிய சமயத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து ஜெய்சங்கர் கூறுகையில், “தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்பதை ஆபரேஷன் சிந்தூர் மூலம் உலகிற்கு மிகத் தெளிவாக தெரிவித்துள்ளோம். பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் ” என்றார். (ஐ)

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல்: 48 மணி நேரத்தில் 300 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு



காசா மீது இஸ்ரேல் ராணுவம் குண்டுவீசி தாக்கியதில் கடந்த 48 மணிநேரத்தில் 300 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். பாலஸ்தீனத்தின்காசாமுனை மீதான இஸ்ரேலின் போர்2-வது ஆண்டை நெருங்கி உள்ளது. இதில்56 ஆயிரத்திற்கும்மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல்- காசா இடையே விரைவில் போர் நிறுத்தம் ஏற்படும் என அமெரிக்க அதிபர் தெரிவித்திருந்தார். என்ற போதிலும் இஸ்ரேல் வான் தாக்குதலை நிறுத்தவில்லை. நேற்றிரவு காசாவில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போது பட்டினியால் தவித்து வரும் பாலஸ்தீனர்கள்உதவிப்பொருட்களுக்களுக்கான காத்திருந்து வருகின்றனர். அவர்களுக்கு உதவி பொருட்கள் வழங்க லாரிகள் மூலம் பொருட்கள் எடுத்துச்செல்லப்படுகிறது. இந்த லாரிகளில்வரும் உதவிப்பொருட்களை பெறுவதற்கு பாலஸ்தீன மக்கள் முண்டியத்துச் செல்லும் பரிதாப நிலை ஏற்படுகிறது. அவ்வாறு முண்டியடித்துச் செல்லும் பட்டினியால் தவிக்கும் அப்பாவி மக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்துகிறது. அவ்வாறு காசாவில் பல்வேறு இடங்களில் உதவிப் பொருட்கள் வாங்கும் இடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 38 உயிரிழந்தனர்.

காசா மீது இஸ்ரேல் ராணுவம் குண்டுவீசி தாக்கியதில் கடந்த 48 மணிநேரத்தில் 300 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். அதிகாலையில் இருந்து இஸ்ரேல் குண்டு வீசியதிலும் துப்பாக்கியால் சுட்டதிலும் 73 பாலஸ்தீனர்களும், அமெரிக்கா ஆதரவுடன் சில அமைப்புகள் வழங்கும் உணவுப்பொருளை வாங்கச் சென்ற சிறுவர்கள் 33 பேரும் பலியாகியுள்ளனர். பள்ளியில் தங்கியிருந்த மக்கள் 16 பேரையும் நிவாரண முகாமில் இருந்த 13 பேரையும் இஸ்ரேல் கொன்றுள்ளது. காசா மருத்துவமனை இயக்குநரை குடும்பத்துடன் இஸ்ரேல் கொன்றுவிட்டதாக காசா அரசு செய்தித்துறை தகவல் தெரிவித்துள்ளது.(ஐ)





# தாய்லாந்தில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாஜி பிரதமர் ஷினவத்ரா அமைச்சராக பதவியேற்பு

தாய்லாந்தில் சஸ்பெண்ட் செய்யப்பட்ட முன்னாள் பெண் பிரதமர் ஷினவத்ரா கலாசார துறை அமைச்சராக நேற்று பதவியேற்றார். தாய்லாந்து பிரதமராக இருந்த ஷினவத்ராவை அரசியலமைப்பு நீதிமன்றம் சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டது. ஷினவத்ரா பதவி இழந்ததை தொடர்ந்து இடைக்கால பிரதமராக சூர்யா ஜங்ருங் ரியாங்கிட்டை பிரதமராக நியமித்து மன்னர் மஹா வஜ்ரிலாங்கோர்ன் உத்தரவிட்டார். புதிய அமைச்சரவை பதவியேற்பு விழா நேற்று நடந்தது. இதில் முன்னாள் பிரதமர் ஷினவத்ரா கலாசார துறை அமைச்சராக பதவியேற்றார். பிரதமர் சூர்யா ஜங்ருங் ரியாங்கிட் பிரதமர் பொறுப்பை துணை பிரதமராக உள்ள பும்தாம் வெச்சாயா சாய் என்பவரிடம் விரைவில் ஒப்படைப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. பும்தாம் வெச்சாயாவும் தற்காலிகமாக பிரதமர் பதவியில் இருப்பார் என கூறப்படுகிறது. (ஐ)




# உக்ரைன் எல்லைக்கு அருகில் ரஷ்ய கடற்படை ஜெனரல் பலி

ரஷ்ய கடற்படையின் துணைத் தலைவரான மேஜர் ஜெனரல் மிகைல் குட்கோவ், உக்ரைனின் சுமி பிராந்தியத்தின் எல்லையான மேற்கு குர்ஸ்க் பகுதிக்கு சென்ற போது உக்ரைன் தாக்குதலில் பலியானார். ரஷ்ய கூட்டமைப்பின் ஹீரோ என்ற மிக உயர்ந்த பட்டத்தால் அலங்கரிக்கப்பட்ட குட்கோவ், மார்ச் மாதம் கடற்படைத் தளபதியின் துணைத் தலைவராக பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு, 155வது மரைன் படைப்பிரிவின் தளபதியாக இருந்தார்.

ஜெனரல்குட்கோவ்தனது படைகளை முன்னணியில் பார்வையிட்டபோது கொல்லப்பட்டார் என்று குர்ஸ்க் பிராந்திய ஆளுநர் அலெக்சாண்டர் கின்ஷ்டீன் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீதான போரில் இதுவரை ரஷ்யாவின் 10 ஜெனரல்கள் கொல்லப்பட்டதாக மாஸ்கோ உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

## தென்னிலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுவத்தை கிராம அபிவிருத்தி மாவத்தையில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இருந்த ஒருவரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட நபர் கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய கூட்டாளியான 'அமி உப்புல்' என்ற நபர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் குறித்த தொழில் முகாமில் 30 நிறுவனங்கள் தமது நிறுவனங்களின் வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கான எதிர்பார்ப்புடன் பங்கேற்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்

விக்னேஸ்வரன் ஐங்கரன் யாழ். ஊடக அமையத்தில் இன்று தெரிவித்தார்.

ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை நடத்திய அவர் மேலும் கூறுகையில்,

"பல தொழில் சந்தைகள் நடைபெற்றாலும் இம்முறை நடைபெறும் தொழில் வாய்ப்பு முகாம் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என நம்புகின்றோம்.

இந்த முகாம் ஊடாக முதற்கட்டமாக 150 இளைஞர், யுவதிகளுக்கு உடனடி வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலை எதிர்பார்போர் வருகை தரவுள்ளனர்." - என்றார்.

## ஹயஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(காலை இடம்பெற்றது. விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் வவுனியா - யாழ். வீதியில் புதிய பேருந்து நிலையம் முன்பாக சென்று கொண்டிருந்த போது வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சந்திரசேனவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது தனது அன்புக்குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று முற்பகல் முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில் குறித்த சட்டத்தை நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்காகக் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு தற்போது அனைத்து கருத்துகள் - யோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது. பொதுமக்களின் கருத்துகளும் கோரப்பட்டன.

அந்தவகையில் செப்டெம்பர் மாதமளவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்படும்.

கருத்துச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், அடையாளம் என்பவற்றைப் பாதுகாக்கும் வகையிலும், சர்வதேச நியமனங்களுக்கு அமையவும், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலுமே புதிய சட்டத்தை இயற்ற எதிர்பார்க்கின்றோம்.

பழைய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் இருந்த விமர்சனங்கள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும்.

அதேவேளை, நூதன பூகோல பயங்கரவாதத்துக்கு முகம் கொடுப்பதற்குரிய சட்டப் பாதுகாப்பு கவசமும் அவசியம். அதற்குரிய ஏற்பாடும் செய்யப்படும்." - என்றார்.

# மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ள யாழ். செம்மணி மனித புதைகுழி அகழ்வு!

யாழ். செம்மணி மனித புதைகுழி அகழ்வுப் பிரதேசம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மனித எலும்புகள் காணப்படலாம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா நீதிமன்றத்திற்கு அறிக்கை அளித்ததை அடுத்து, நேற்றுமுன்தினம் (ஜூன் 2) முதல் அந்த பகுதியிலும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

செம்மணியில் இதுவரை இடம்பெற்ற அகழ்வில் 40 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவற்றில் குறைந்தது பத்து சிறுவர்களின் எலும்புக்கூடுகள் இருப்பதாக அகழ்வாய்வாளர்கள் கூறுகின்றனர்.

புதைகுழி அகழ்வாய்வாளர்களான பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோர் சிறுவர்களுடையது என நம்பப்படும் 2 எலும்புக்கூடுகளை இன்று கண்டறிந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அகழ்வுப் பணியை மேற்பார்வை செய்யும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## குப்பைத் தொட்டியில் இருந்து காணாமல் போயிருந்த வர்த்தகரின் சடலம் மீட்பு!

வென்னப்புவ பகுதியில் உள்ள குப்பைத் தொட்டியில் இருந்து பல நாட்களாக காணாமல் போயிருந்த வர்த்தகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாரவில, கட்டுநேரிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஸ்ரீஜித் ஜயசுன் என்ற வர்த்தகரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

குறித்த வர்த்தகர் கடந்த 30ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்ததாக வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில், நேற்று (03) மாலை வென்னப்புவ பகுதியில் உள்ள வர்த்தகரின் நண்பரின் வீட்டில் அவரது மோட்டார் வாகனம் கண்டெடுக்கப்பட்டது.

பின்னர் குறித்த நண்பரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில், வென்னப்புவ சிரிகம்பொல பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் குப்பைத் தொட்டியில் இருந்துகாணாமல் போன வர்த்தகரின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி இரவு வர்த்தகர் தனது ஐந்து நண்பர்களுடன் மது அருந்தியதாகவும், அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது, வர்த்தகர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு, குப்பை தொட்டியில் வீசப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## பேருந்தின் மிதி பலகையில் இருந்து விழுந்த மாணவன்– சாரதி மற்றும் நடத்துனருக்கு எதிராக நடவடிக்கை!

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த சிசுசெரிய பேருந்தின் மிதி பலகையில் இருந்து மாணவர் ஒருவர் விழுந்த சம்பவம் தொடர்பான விசாரணையில், சாரதி மற்றும் நடத்துனரின் கவனக்குறைவாலும், அலட்சியமாக வாகனம் ஓட்டியமையுமே விபத்துக்குக் காரணம் என கண்டறியப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றிருந்தது.

அதன்படி, வடமேற்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழு குறித்த பேருந்தில் பணியாற்றிய சாரதி மற்றும் நடத்துனரின் சேவைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேருந்து கட்டண திருத்தம் இன்று முதல் அமுல்!

வருடாந்த பேருந்து கட்டண திருத்தம் இன்று (04) முதல் அமுலுக்கு வருவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி பேருந்து கட்டணம் 0.55% வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன தெரிவித்தார்.

எனினும் வருடாந்த பேருந்து புதிய கட்டணத்தில் குறைந்தபட்ச பேருந்து கட்டணமான 27 ரூபாய், இரண்டாவது நிலையான கட்டணம் 35 ரூபாய், மற்றும் மூன்றாவது நிலையான கட்டணம் 45 ரூபாய் ஆகியவற்றில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும், நான்காவது கட்டண நிலையிலிருந்து பேருந்து கட்டணங்கள் மாற்றப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி 56, 77, 87, 117, 136 மற்றும் 141 ரூபாய் உள்ளடங்கிய சில கட்டண நிலைகள் ஒரு ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், மற்ற அனைத்து கட்டண நிலைகளும் 2 ரூபாய் மற்றும் 3 ரூபாய் அளவில் குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பேருந்து கட்டண திருத்தங்களை அனைத்து பேருந்துகளிலும் காட்சிப்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், புதிய திருத்தங்களுக்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படாவிட்டால், 1955 என்ற உடனடி தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

## இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் கட்டுநாயக்கவில் கைது!

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட மூன்று இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பாரிய அளவிலான நிதி மோசடி செய்து இந்தியாவுக்கு தப்பிச் சென்ற மூன்று சந்தேகநபர்களும் நேற்று பிற்பகல் நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட வேளையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

33, 34 மற்றும் 44 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மது அருந்திக்கொண்டிருந்த இளைஞன் திடீர் மரணம்– யாழில் சோகம்!

சுன்னாகம் பகுதியில் நண்பர்களுடன் மது அருந்திக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சுஜீவன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவது,

குறித்த இளைஞனும் அவரது நண்பர்களும் நேற்று முன்தினம் இரவு மதுபானம் அருந்திக்கொண்டிருந்தனர்.

இந்தவேளையில் இளைஞனுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டவே உடனிருந்த நண்பர்கள் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் குறித்த இளைஞன் உயிரிழந்ததையடுத்து அவரது நண்பர்கள் சிலர் தலைமறைவாகியதால் சுன்னாகம் காவல்துறையினர் அவர்களை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சிலாபம் – புத்தளம் வீதியில் இ.போ.ச. பஸ் கோர விபத்து

சிலாபம், ஜூலை 04

சிலாபம் - புத்தளம் வீதியில் தெதுறு ஓயா பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ் விபத்து இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 21 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகச் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2025 வெளியிடப்பெற்றது.